மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரவர்களின் வேண்டுகோளின்படி கேள்வி 581-ம், 582ம் தள்ளி வைக்கப்படுகிறது.

திண்டிவனத்தில் பேருந்து நிலையம்.

*583 வினு—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) திண்டிவனத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் சுமார் 5 இலட்சம் செலவில் பேருந்து நிலையம் கட்டிமுடிக்கப்பட்டும் இன்னும் திறக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) திண்டிவனத்தில் உள்ள பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் விரைவுப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் வேலை முடிக்கப்பட்டது. விரிவுபடுத்தப் பட்ட நிலையம் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் முதல் பேருந்துகளின் உபயோகத்தில் இருந்து வருகிறது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

புதுக்கோட்டையிலிருந்து விரைவுப் பேருந்துகள்.

*584 வினு—திரு. த. புஸ்பராஜு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா?

புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்கும், புதுக்கோட்டையிலிருந்து கோயம்புத்தூருக்கும் விரைவு பஸ் விட நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தற்சமயம் இல்லை.

(முற்பகல் 10-00)

திரு. த. புஸ்பராஜு: தலைவரவர்களே, சுமார் ஒரு வருட காலத்திற்கு முன்பு புதுக்கோட்டையிலே இருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து விடப்பட்டிருந்தது. ஆம்னி பஸ்ஸின் கட்டணத்தை விட அது ரூபாய் 5 அதிகமாக இருந்த காரணத்தால் வசூலாகாத நிலையில் நிறுத்தப்பட்டது; அந்த பஸ் திரும்